2013 ஏப்ரல் 5] [முனைவர் வைகைச்செல்வன்]

மதிப்பெண்கள் வழங்கப்படும் என்ற செய்தியை அரசு தேர்வுத் துறை இயக்குநர் அறிவித்திருக்கிறார். இது எதனுடைய நடைமுறை என்று சொன்னால், கடந்த காலத்தில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், 2008 இல் வேலூரில் ஊரிஸ் அரசு மேல்நிலைப் பள்ளியில் தீ விபத்து நடைபெற்றபோது எப்படிப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவோ, அதே நடைமுறைகள்தான் இந்தத் தேர்விலும் பின்பற்றப்பட்டு இருக்கின்றன.

இறுதியாக இருக்கிற கேள்விக்கு, தற்போது நடைபெற்ற 221 வினாத்தாள்கள் காணாமல் போய் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். உரிய முறையிலே கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற அந்த முதல் தாளில் 2 ஆம் தாளின் மதிப்பெண்ணைப் போடுவதற்குப் பதிலாக மறு தேர்வு வைக்கலாமா என்கிற ஒரு பரிசீலனை அரசிடம் உள்ளது. உரிய முறையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று விரைவிலே ஒரு நல்ல தகவலை அறிவிப்போம் என்ற செய்தியைச் சொல்லி விடைபெறுகிறேன், வணக்கம்.

## 5. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர். (குறுக்கீடு) இல்லை, விவாதம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, விவாதம் இல்லை. (குறுக்கீடு) அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு என்ன சப்ஜெக்ட் இருக்கிறது? (குறுக்கீடு) அதெல்லாம் முடிந்துவிட்டது, அவற்றை எல்லாம் நாளை காலை எடுக்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் திடீர் என்று எடுத்தால் கேள்விக்குப் பதில் இருக்காது. Zero hour முடிந்து, ரொம்ப நேரம் ஆகிவிட்டது. இப்பொழுது நாம் குழுக்களின் அறிக்கைக்கு வந்துவிட்டோம். நீங்கள் இப்போது எழுப்பினால் அது சரியல்ல. உட்காருங்கள், அதை பிறகு பார்க்கலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், அதை பிறகு பார்க்கலாம். அதை எல்லாம் இப்பொழுது கேட்க

முடியாது. தினம் ஒன்றை எடுத்துக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு அறிவிப்பு எடுத்துக்கொள்ளப்பட்டு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் எழுந்து பேசிக்கொண்டிருக்கிறார், நீங்கள் எழுந்து நின்றுகொண்டிருக்கிறீர்களே, (குறுக்கீடுகள்) உட்காருங்கள் டாக்டர். எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு இப்பொழுது வந்து கேட்கிறீர்களே.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு அறிவிப்பு எடுக்கப்பட்டு, விரிவாக விவாதிக்கப்பட்டு, உரிய பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்ததற்குப் பின், Zero hour-ல் கேள்வி எழுப்புவதற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடு) Zero hour முடிந்து எவ்வளவு நேரம் ஆகிறது. இப்போது சொன்னால் எப்படி? (குறுக்கீடுகள்) இதையெல்லாம் என் அறையில் வந்து கேளுங்கள். இவையெல்லாம் என் அறையில் வந்து கேட்கப்பட வேண்டிய கேள்விகள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த அறிவிப்புகள் எல்லாம் என் ஆய்வில் உள்ளன. என் அறையில் வந்து இதைப் பற்றிக் கேளுங்கள். இதைப்பற்றி திடீரென்று எழுப்பக்கூடாது. தினம் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். நீங்கள் திடீரென்று எதனையும் எழுப்பக்கூடாது. நீங்கள் ஒரே நேரத்தில் கேட்டால், அனைத்தையும் எடுத்துக்கொள்ள இயலாது. ஆகையால், கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள், (குறுக்கீடுகள்)

2013 ஏப்ரல் 5] [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. Zero hour முடிந்து அதிக நேரம் ஆகிவிட்டது. இப்போது நான் குழுக்களின் அறிக்கைகள் அளித்தல் பகுதிக்கு வந்து விட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு)

குழுக்களின் அறிக்கைகள் அளித்தல் பகுதிக்கு வந்த பிறகு, திடீரென்று எழுந்து நின்று நீங்கள் அவையின் நேரத்தை வீணடிப்பது சரியல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து எல்லோரும் உட்காரும்படி கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மேல் நீங்கள் எல்லோரும் நின்றால், இதற்கு மேலும் நான் எப்படி பொறுமையாக இருக்க முடியும்? நான் அவையை நடத்த வேண்டியிருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. க. பாலகிருஷ்ணன், (குறுக்கீடு) உட்காருங்கள் செல்வி கே. பாலபாரதி.

குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர். (குறுக்கீடு) நீங்கள் செய்வது முறையல்ல (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் பேசுவது முறையல்ல, உட்காருங்கள், இதற்கு நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அதெல்லாம் என்னுடைய உரிமை, அதையெல்லாம் என்னிடம் நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடு) அவைத் தலைவருடைய உரிமையில் நீங்கள் தலையிட முடியாது. (குறுக்கீடு) உங்கள் சௌகரியத்திற்குக் கேட்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இதையெல்லாம் நீங்கள் என் அறையில் வந்து கேட்க வேண்டும். அவையில் கேட்க முடியாது. மறுப்பது என்பது அவைத் தலைவருடைய உரிமை ஆகும். (குறுக்கீடு) நீங்கள் வந்து என் அறையில் தனியாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அதையெல்லாம் கேட்க முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திடீரென்று ஒவ்வொருவரும் எழுந்து, ஒவ்வொரு பிரச்சினையாகக் கேட்க முடியாது. இது முறையல்ல. (குறுக்கீடு) இல்லை. நீங்கள் செய்வது முறையல்ல. (குறுக்கீடு) நான் தினமும் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, ஜனநாயக முறைப்படி அவையை நடத்திக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் கொடுத்திருக்கிற முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். நீங்கள் அதை மீறி, திடீரென்று எழுந்து கேள்வி கேட்க முடியாது. இது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் செய்வது

*முறையல்ல. அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு தரவில்லை; அது மட்டும் என்னால் சொல்ல முடியும்.*

*(இந்திய கம்யூனிஸ்டு கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

## 6. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.*

**திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம் நடத்திய சர்வே அடிப்படையில் இன்றைக்கு ஒருவேளை உணவிற்கே வழியில்லாமல் திண்டாடி வருகின்ற மேற்கு வங்கம், ஒடிசா, மத்தியப் பிரதேசம், அசாம், சத்தீஸ்கர் போன்ற இன்னும் பிற வடபுலத்து மாநில மக்களை பசிப் பிணியிலிருந்து காப்பற்றிட வழி தெரியாமல், விழி பிதுங்கி நிற்கின்ற முதலமைச்சர்களுக்கு மத்தியிலே, அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் வழிகாட்டுகின்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) அன்னை தமிழகத்தில் கல்விக் கூடங்கள் தொடங்கி, ஆண்டவன் உறையும் ஆலயங்கள் வரை அனுதினமும் அன்னதானம், இல்லங்கள்தோறும் 20 கிலோ விலையில்லா அரிசி. மேலும், மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கையால் உயர்ந்து வருகின்ற விலைவாசியைக் கட்டுப்படுத்திட 11 அம்ச திட்டமென அள்ளித் தந்து, "பட்டினி" என்னும் வார்த்தை அன்னைத் தமிழகத்தின் எல்லைக்குள்ளே எங்கேயும் இல்லை என்ற நிலையை (மேசையைத் தட்டும் ஒலி) தன் சீரிய சிந்தனையால் உதித்திட்ட சீர்மிகுத் திட்டங்களால் உருவாக்கி, இன்றைக்கு இந்தத் தலைமுறையை நலமோடு வாழ வைப்பது மட்டுமன்றி, வருங்கால தலைமுறையும் நலமோடும், வளமோடும் வாழ வைத்திட, வல்லரசு நாடுகளும், வளர்ந்த தேசங்களும் மட்டுமே சிந்திக்கின்ற தொலைநோக்குப் பார்வையுடன் இந்திய திருநாட்டில் உள்ள மாநிலங்களில் எங்கும் இதுவரையில் காணாத 'தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023'-ஐ வழங்கி, தாய்த் தமிழ்நாட்டை தலைசிறந்த நாடாக உருவாக்கிட, உறங்காது விழித்து,*